மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.வி.சண்முகம் நாளை காலையில் நீங்கள் தொடர்ந்து பேசலாம். நாளை பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. இன்னும் 2, 3 கட்சித் தலைவர்களும் பேச வேண்டி இருக்கிறது எதிர்க்கட்சித் தலைவரும் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) பிறகு நிதியமைச்சருடைய பதிலுரை இருக்கிறது கேள்வி நேரத்தைத் தளர்த்துவது குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-10

5. அரசினர் தீர்மானம்

(பேரவை விதி 32-ஐத் தளர்த்தல்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான்தீர்மானத்தை முன் மொழிகிறேன். சட்ட மன்ற ஒரு மணி நேரம் சட்டமன்ற பேரவையின் முதல்வினவிாக்கள் டைகள்பேரவை.விதி 32-ஐ 19-3-1993 அன்று தளர்த்தி ந்த நேரத்தைஅரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க (ஆம்)
மறுப்போர் இல்லை என்க
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன.
(19-3-1993)

பேரவை மீண்டும் நாளைக் காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.11 மணிக்கு, ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

114. 15—5—1991-ஆம் நாளிட்ட உள் துறையின் அறிவிக்கை எண். II (2)/HO/2507/91-ல் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின்

4—1—1993-ஆம் நாளிட்ட 1-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

115. திண்டுக்கல்—அண்ணா மாவட்டம், தாண்டிக்குடி, திருவாளர்கள் குட்வில் குழந்தைகள் கிராமச் சங்கத்திற்கு சொந்தமான இயக்கூர்தி எண். டி. என். 57—இசட்—3023-ஐ அன்பளிப்பாகவும், வாடகைக்கு அளிக்காமலும் தொண்டு நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்தும்வரை அந்நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியைக் குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 24—9—1992-ஆம் நாளிட்ட 1625 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பரிவின் கீழ் பேரவைமுன் வைக்க பெற்றது).

116. சென்னை சிசேப்ரேனியா கேர் மற்றும் ரிசர்ச் பவுன்டேஷன் நிறுவனத்திற்குச் சொந்தமான இயக்கூர்தி எண். டி. என். 01—எ—4699-ஐ அன்பளிப்பாகவும் வாடகைக்கு அளிக்காமலும் தொண்டு நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்தும் வரை, அந்நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியைக் குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 24—9—1992-ஆம் நாளிட்ட 1627-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

117. 1990—91-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

118. 1991–92-ஆம் ஆண்டிற்காக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்),

119. 1991—92-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் பன்னிரண்டாவது ஆண்டறிக்கை 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

—இல்லை.—